RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2245

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

# பன்னிருபாட்டியலும் பிரபந்த தீபிகையும்

க. ராஜ ஸ்ரீ [அ,*], சு. தமிழ்வேலு [அ]

[அ] தமிழாய்வுத்துறை, அ.வ.அ. கல்லூரி (தன்னாட்சி), மன்னன்பந்தல், மயிலாடுதுறை-609305, தமிழ்நாடு இந்தியா

# 'Pannirupaattiyal (The Twelve Songs) and the Novel, 'Prabandha Deepikai'

**K. Rajasree [a,*], S. Tamilvelu [a]**

[a] Department of Tamil, A.V.C. College (Autonomous), Mannampandal, Mayiladuthurai-609305, Tamil Nadu, India
*Corresponding author Email: kdasan1234@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2245
Received: 17-09-2022; Revised: 29-10-2022; Accepted: 06-11-2022; Published: 25-11-2022

**Abstract:** The life and cultures of human society are of a changing nature from time to time. Literature reflects the cultural norms that prevailed at that time. Grammars are those that characterize literary norms and preserve the richness of language. The separate category of such grammar is the Paattiyal. The earliest of the fully available Paattiyal books by time is the twelve hymns. The three disciplines of epigraphy, terminology, and ethnology consist of 360 volumes. Many Paattiyal books have appeared before this book. None of them are fully available today. The oldest of the texts is the Pannirupaattiyal, the period of which is the tenth century AD. Generally, there are three sections of Paattiyal texts. It is necessary to think about the nature of the compositions, the part that explains the prabandhams, the section on the sequel, the second section that is the grammar of the literary genres, and the nature of the Paattiyal texts.

**Keywords:** Pannirupaattiyal, Prabandha Deepikai, Grammar, Paattiyal texts.

## முன்னுரை

மனித சமுதாயத்தின் வாழ்வியல் பண்பாடுகள் காலந்தோறும் மாறி வளரும் இயல்புடையவை. அவ்வக்காலத்தில் நிலவிய பண்பாட்டு நெறிகளை இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. இப்பாட்டியல் பொருண்மையில் பிரபந்தங்களைக் கூறும் முறையில் ஒத்தக்கருத்தும் வேறுபாடும் பரந்து காணக்கிடைக்கின்றன. அவை எவ்வகையில் பேசப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

## பன்னிருபாட்டியல்

முழுமையாய்க் கிடைக்கின்ற பாட்டியனூல்களுள் காலத்தால் முந்தையது பன்னிருபாட்டியலாகும். இந்நூலின் காலம் பற்றி அறியமுடியவில்லை. எழுத்தியல்இசொல்லியல்இ இனவியல் என மூன்றியல்களும் 360 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. இந்நூலுக்கு முன் பல பாட்டியனூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் எவையும் இன்று முழுமையாய்க் கிடைக்கவில்லை. நூல்களில் பழமையானது பன்னிருபாட்டியல் இதன் காலம் கிபி பத்தாம் நூற்றாண்டு (Arunachala Pillai, 2010). பாட்டியல் நூல்களின் தொடக்க காலமாக 8-9 ஆம் நூற்றாண்டை அருணாசலமும் மருதூர் அரங்கராசனும் கூறியுள்ளனர் (Arangarasan 2014).

பொதுவாகப் பாட்டியல் நூல்கள் மூன்று பிரிவுகளாக அமைந்திருக்கும். 1. பொருத்தங்களை விளக்கும் பகுதி, 2. பிரபந்தங்களை விளக்கும் பகுதி, 3. ஒழிபியல் பகுதி, இரண்டாம் பிரிவாகிய இலக்கிய வகைகளின் இலக்கணம் பாட்டியல் நூல்களில் கூறப்படும் இயல்பு பற்றிச் சிந்தித்தல் இன்றியமையாதது.

பன்னிருபாட்டியல் அறுபத்திரண்டு இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறுகின்றது. பிரபந்தங்கள் 96 என்னும் பட்டியலில் நாற்பத்து மூன்றுக்கு மட்டுமே பன்னிருபாட்டியல் இலக்கணம் கூறுகின்றது. எஞ்சிய ஐம்பத்து மூன்றுக்கு இலக்கணம் கூறப்படவில்லை.

தொண்ணூற்றாறு என்ற எண்ணிக்கைக்கு அனைத்துப் பாட்டியல் நூல்களாலும் மொத்தம் முப்பத்தொன்பது இலக்கிய வகைகளுக்கே இலக்கணம் கிடைத்துள்ளது. பாட்டியல் ஆரம்பக் காலத்தில் பேசப்பட்ட பிரபந்தங்கள் காலப்போக்கில் வளர்ச்சியும் காலூன்றியும் வீழ்ச்சியும் அதன் பாதையில் நிகழ்ந்துள்ளனவா என்பதை அறியவே முழுமையாய்க் கிடைத்துள்ள முதல் நூலான பன்னிருபாட்டியல் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## பிரபந்த தீபிகை

இந்நூலின் ஆசிரியர் பாப்புவையரென்ற முத்து வேங்கிடசுப்பையர் ஆவார். பிரபந்த தீபம் போன்றே இலக்கிய வகைகளைப் பற்றிக் கூறுவதால் பிரபந்த தீபிகை எனப் பெயர் பெற்றது எனலாம். 100 நூற்பாக்கள் கொண்டது. இயல் பகுப்போ அதிகாரப் பகுப்போ இந்நூலில் இல்லை.

பிரபந்த தீபிகையின் காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி ஆகும். கிபி 7 ஆம் நூற்றாண்டு முதல் எழுந்து மெல்ல மெல்ல வளர்ச்சியுற்ற பாட்டியல் நூல்கள் கிபி 19 ஆம் நூற்றாண்டு வரை வளர்ச்சியுற்று நிலைபெற்றது (Jeyaraman, 2008).

கிபி 9 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த பன்னிருபாட்டியல் முதல் நூலாகவும் 19 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற பிரபந்த தீபிகை பாட்டியல் வரிசையில் கடைசி நூலாகவும் இருப்பதால் ஒப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன. இந்த இடைக்காலத்தில் எழுந்த சிற்றிலக்கிய வளர்ச்சியை அளவிட்டு ஆய்வு செய்வதற்கு இக்கட்டுரை முயல்கின்றது.

## தொண்ணூற்றாறு - வகைகள்

இலக்கிய வகைகளைத் தொண்ணூற்றாறு என்ற பட்டியலில் அடக்கிக் காட்டுவது பாட்டியல் நூல்களின் மரபு என்று அறியமுடிகின்றது. கிபி 16 ஆம் நூற்றாண்டில் எழுந்த பிரபந்த மரபியல் தான் இலக்கிய வகைகளைத் தொண்ணூற்றாறு என முதன் முதலாகப் பட்டியலிட்டு இலக்கணம் கூறத் தொடங்கியது.

பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்

தொண்ணூற்றாறு என்னும் தொகையதாம்

எனவரும் பிரபந்த மரபியல் பகுதி பிள்ளைக்கவிமுதல் புராணம் வரையுள்ள வரிசையில் தொண்ணூற்றாறு என்ற பட்டியலை அமைத்துள்ளது. ஆனால் பிரபந்த மரபியல் முழுமையாகக் கிடைக்கப்பெறாத நூல் என்பதால் அதனுள் கூறப்பட்ட தொண்ணூற்றாறு இலக்கிய வகைகள் எவை என்பன அறிய இயலவில்லை (Arunachala Pillai, 2010).

கிபி 18 ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட சதுர அகராதியில் சாதகம் முதலாகக் காப்பியம் ஈறாக தொண்ணூற்றாறு என்று வரையறையைத் தந்துள்ளார். பிரபந்த மரபியலில் கிடைத்துள்ள பகுதி வரை பார்க்கும் போது அந்தாதி, எண்மாலை, புராணம், பெயர்மாலை, முல்லைக்கவி, யானைத்தொழில் என்ற ஆறு வகைகளுக்குச் சதுரகராதியில் இலக்கணம் கூறப்படவில்லை. பாட்டியல் நூல்களுக்கிடையே இருவேறுபட்ட கருத்துகள் நிலவின என்பதை அறிய முடிகின்றது.

### பன்னிருபாட்டியல் - பிரபந்தம்

பன்னிருபாட்டியல் குறிப்பிடும் பிரபந்த வகைகளுள் சில இந்நூல் தோன்றிய காலத்திற்கு முந்தையனவாகக் கிடைக்காமையாலும் வேறுசில இன்றளவும் கிடைக்காமையாலும் பல பிரபந்தங்கள் இப்படி எழுதலாம் எனத் திட்டமிட்டு வரையறைச் சுட்டப்பட்டிருக்கலாம் என்று கருதுவர் அறிஞர் அவர்கள் (Arunachala Pillai, 2010).

பன்னிருபாட்டியல் கூறுகின்ற பிரபந்த வகைகள் யாவும் அந்நூல் தோன்றிய காலத்தில் வாழ்ந்து பின்னர் வீழ்ந்திருக்கக் கூடும் என்னும் கருத்தினை ஏற்க மறுக்கிறார் அவர் (Arunachala Pillai, 2010).

பன்னிரு பாட்டியலில் இலக்கணம் பெறும் இலக்கியங்களின் எண்ணிக்கையை 61 (அறுபத்தொன்று) என்று காட்டுவர் அவர்கள் 62 என்று சுட்டுவர் (Jeyaraman, 2008). அவர்கள் 65 (அறுபத்தைந்து) என்பர் (Sanmugam, 2013) அவர்கள் 66 (அறுபத்தாறு) என்று குறிக்கிறார் (Ragava Iyangar, 2016).

இந்நூலில் உள்ள இலக்கிய வகைகள் 74 (எழுபத்தி நான்கு) என்று ஒரிடத்தும்” 91 (தொண்ணூற்றொன்று) என்று வேறிடத்தும் எண்ணிக்கை காட்டுவர் (Arunachala Pillai, 2010). எண்ணிக்கையில் கூட எல்லாம் ஒரே பட்டியலைத் தருகின்றன என்றோ ஒரே வைப்புமுறையில் தருகின்றன என்றோ கூறமுடியாது. இவ்வெண்ணிக்கை விகற்பமெல்லாம் ஓர் இலக்கியத்தின் உடன்வகைகட்டுத் தனியெண் கொடுத்து நிற்பதுவும் கொடுக்காதிருப்பதுவும் பற்றி அமைவனவாம் என்றும் “உரையிற்கோடல்” என்றும் உத்தியான் உரையாசிரியர் கூறும் இலக்கிய வகைகளையெல்லாம் நூலாசிரியர் கூறியதாக மயங்குதலும் எண்ணிக்கை வேறுபாட்டிற்குக் காரணமாக இருக்கலாம் என்று மருதூர் குறிப்பிடுவது ஏற்புடையதாக அமைகின்றது (Arangarasan, 2014). பன்னிருபாட்டியலில் குறிக்கப்பட்டுள்ள இலக்கியங்கள் அட்டவணை 1-ல் பின்வருமாறு.

**அட்டவணை 1. பன்னிருபாட்டியலில் குறிக்கப்பட்டுள்ள இலக்கியங்கள்**

| வ.எண் | நூல்கள் | வ.எண் | நூல்கள் |
|---|---|---|---|
| 1 | சாதகம் | 32 | மங்கல வெள்ளை |
| 2 | பிள்ளைப பாட்டு | 33 | தாரகை மாலை |
| 3 | வேந்தன்குடைமங்கலம் | 34 | செந்தமிழ் மாலை |
| 4 | ஒருபோகு | 35 | தாண்டகம் |
| 5 | கலம்பகம் | 36 | பதிகம் |
| 6 | உலா | 37 | சீர்மெய்க்கீர்த்தி |
| 7 | சின்னப்பூ | 38 | சீர்மெய்க்கீர்த்தி |
| 8 | பரணி | 39 | மறக்கள வஞ்சி |
| 9 | மடல் | 40 | செருக்கள வஞ்சி |
| 10 | மறம் | 41 | ஆற்றுப்படை |
| 11 | பல்சந்தமாலை | 42 | கண்படை நிலை |
| 12 | இணைமணிமாலை | 43 | துயிலெடை நிலை |
| 13 | இரட்டைமணி மாலை | 44 | விளக்கு நிலை |
| 14 | மும்மணி மாலை | 45 | கடா நிலை |
| 15 | நான்மணி மாலை | 46 | யாண்டு நிலை |
| 16 | கலம்பக மாலை | 47 | பறை நிலை |
| 17 | மும்மணிக் கோவை | 48 | அந்தாதித் தொகை |
| 18 | கலி அந்தாதி | 49 | மருட்பா |
| 19 | ஒலி அந்தாதி | 50 | பாதாதிகேசம் |
| 20 | யானைத் தொழில் | 51 | பாணைமுலைப் பத்து |
| 21 | வருக்க மாலை | 52 | நயனப்பத்து |
| 22 | நாம மாலை | 53 | உழத்திப் பாட்டு |
| 23 | இன்னிசைத் தொழில் | 54 | குறத்திப் பாட்டு |
| 24 | விருத்த வகை | 55 | ஒருபா ஒருபஃது |
| 25 | ஐம்படை விருத்தம் | 56 | இருபா இருபஃது |

| | | | |
|---|---|---|---|
| 26 | நாழிகைக் கவி | 57 | கோவை |
| 27 | நவமணி மாலை | 58 | கணக்கு |
| 28 | கைக்கிளை மாலை | 59 | தொடர்நிலைச் செய்யுள் |
| 29 | கைக்கிளை மாலை | 60 | பத்துப்பாட்டு |
| 30 | அட்டமங்கலம் | 61 | கடைநிலை |
| 31 | இல்லற வெள்ளை | 62 | கையறுநிலை |

## பிரபந்த தீபிகை

பாட்டியலில் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்னும் எண்ணிக்கை தரும் நூல்களாகப் பிரபந்த மரபியல், சதுரகராதி, தொன்னூல் விளக்கம், பொருட்டொகை நிகண்டு பிரபந்த திரட்டு ஆகிய நூல்களின் வரிசையில் பிரபந்த தீபிகையும் ஒன்றாகும். பிரபந்த தீபிகையில் கூறப்பட்டுள்ள தொண்ணூற்றாறு இலக்கிய வகைகள் அட்டவணை 2-ல் பின்வருமாறு

**அட்டவணை 2. பிரபந்த தீபிகையில் கூறப்பட்டுள்ள தொண்ணூற்றாறு இலக்கிய வகைகள்**

| வ.எண் | நூல்கள் | வ.எண் | நூல்கள் |
|---|---|---|---|
| 1 | சாதகம் | 49 | பெருமகிழ்ச்சி மாலை |
| 2 | பிள்ளைக் கவி | 50 | மெய்க்கீர்த்திமாலை |
| 3 | பரணி | 51 | காப்புமாலை |
| 4 | கலம்பகம் | 52 | வேனில் மாலை |
| 5 | வருக்கக் கோவை | 53 | வசந்த மாலை |
| 6 | மும்மணிக்கோவை | 54 | தாரகை மாலை |
| 7 | அகப்பொருட்கோவை | 55 | உற்பவ மாலை |
| 8 | ஐந்திணைச்செய்யுள் | 56 | தானை மாலை |
| 9 | அங்கமாலை | 57 | மும்மணி மாலை |
| 10 | அட்டமங்கலம் | 58 | தண்டக மாலை |
| 11 | அனுராக மாலை | 59 | வீரவெட்சி மாலை |
| 12 | இரட்டைமணி மாலை | 60 | வெற்றிக்கரந்தை மஞ்சரி |
| 13 | இணைமணி மாலை | 61 | போர்க்கெழுவஞ்சி |
| 14 | நவமணி மாலை | 62 | வரலாற்று வஞ்சி |
| 15 | நான்மணி மாலை | 63 | எண் செய்யுள் |
| 16 | நாம மாலை | 64 | செருக்கள வஞ்சி |
| 17 | பல்சந்த மாலை | 65 | காஞ்சி மாலை |
| 18 | பன்மணி மாலை | 66 | நொச்சி மாலை |
| 19 | மணி மாலை | 67 | உழுஞை மாலை |
| 20 | புகழ்ச்சி மாலை | 68 | தும்பை மாலை |
| 21 | வருக்க மாலை | 69 | வாகை மாலை |
| 22 | வாதோரண மஞ்சரி | 70 | கேசாதி பாதம் |
| 23 | தொகை நிலைச் செய்யுள் | 71 | அலங்கார பஞ்சகம் |
| 24 | பதிற்றந்தாதி | 72 | கடைநிலை |
| 25 | நூற்றந்தாதி | 73 | கையறுநிலை |
| 26 | உலா | 74 | தசாங்கப்பத்து |
| 27 | உலாமடல் | 75 | பதிகம் |
| 28 | வள மடல் | 76 | குழமகன் |
| 29 | கைக்கிளை | 77 | மங்கலவள்ளை |
| 30 | ஒருபாவொருபது | 78 | நாற்பது |
| 31 | இருபாவிருபது | 79 | தூது |
| 32 | ஆற்றுப்படை | 80 | தாண்டகம் |

| | | | |
|---|---|---|---|
| 33 | புறநிலை | 81 | சதகம் |
| 34 | கண்படை நிலை | 82 | பவனிக்காதல் |
| 35 | துயிலெடை நிலை | 83 | செவியறிவுறூஉ |
| 36 | பெயரின்னிசை | 84 | வாயுறை வாழ்த்து |
| 37 | ஊரின்னிசை | 85 | புறநிலை வாழ்த்து |
| 38 | பெயர் நேரிசை | 86 | குறவஞ்சி |
| 39 | ஊர் நேரிசை | 87 | உழத்திப்பாட்டு |
| 40 | ஊர் வெண்பா | 88 | ஊஞ்சல் |
| 41 | விளக்குநிலை | 89 | எழுகூற்றிருக்கை |
| 42 | நயனப்பத்து | 90 | கடிகை வெண்பா |
| 43 | பயோதரப் பத்து | 91 | முதுகாஞ்சி |
| 44 | அரசன் விருத்தம் | 92 | சின்னப்பூ |
| 45 | தசாங்கத்தயல் | 93 | விருத்தவிலக்கணம் |
| 46 | பாதாதிகேசம் | 94 | இயன்மொழி வாழ்த்து |
| 47 | காப்பியம் | 95 | வண்ணம் |
| 48 | ஒலியலந்தாதி | 96 | பெருமங்கலம் |

## இரண்டு பாட்டியல் பேசும் இலக்கணம்

பன்னிருபாட்டியலிலும் பிரபந்த தீபிகையிலும் பொதுவாக இரண்டு நூல்களிலும் பேசப்பட்டுள்ள இலக்கிய வகைகள் அட்டவணை 3-ல் பின்வருமாறு.

அட்டவணை 3. இரண்டு நூல்களிலும் பேசப்பட்டுள்ள இலக்கிய வகைகள்

| வ.எண் | நூல்கள் | வ.எண் | நூல்கள் |
|---|---|---|---|
| 1 | சாதகம் | 16 | ஆற்றுப்படை |
| 2 | பிள்ளைக் கவி | 17 | கண்படை நிலை |
| 3 | பரணி | 18 | துயிலெடை நிலை |
| 4 | கலம்பகம் | 19 | தாரகை மாலை |
| 5 | மும்மணிக்கோவை | 20 | மும்மணி மாலை |
| 6 | அட்டமங்கலம் | 21 | செருக்கள வஞ்சி |
| 7 | இரட்டைமணி மாலை | 22 | கடைநிலை |
| 8 | இணைமணி மாலை | 23 | கையறுநிலை |
| 9 | நவமணி மாலை | 24 | பதிகம் |
| 10 | நான்மணி மாலை | 25 | தாண்டகம் |
| 11 | நாம மாலை | 26 | உழத்திப்பாட்டு |
| 12 | பல்சந்த மாலை | 27 | விளக்குநிலை |
| 13 | வருக்க மாலை | 28 | நயனப்பத்து |
| 14 | ஒலியலந்தாதி | 29 | பாதாதிகேசம் |
| 15 | உலா | 30 | சின்னப்பூ |

கி.பி 12 ஆம் நூற்றாண்டாகிய பன்னிருபாட்டியல் காலம் முதல் கி.பி 19 ஆம் நூற்றாண்டாகிய காலக்கட்டம் வரை அனைத்துப் பாட்டியல் நூல்களாலும் இலக்கணம் கூறப்பட்ட பிரபந்தங்கள் பதினொன்று மட்டுமே. அவை

1. இரட்டை மணி மாலை, 2. உலா, 3. கலம்பகம், 4. கோவை, 5. நான்மணிமாலை, 6. பரணி, 7. பன்மணிமாலை, 8. பிள்ளைத்தமிழ், 9. மடல், 10 மும்மணி கோவை, 11. மும்மணி மாலை ஆகும்.

தொண்ணூற்றாறு என்ற பட்டியலில் சில இலக்கிய வகைகள் மட்டுமே அனைத்து பாட்டியல் ஆசிரியர்களாலும் எல்லாக்காலத்தும் தொடர்ந்து வந்த கால வெள்ளத்தில் சிதையாமல் எதிர்நீச்சலிட்டு, இறுதிகாலம் வரை பாட்டியல் நூல்களிலும் மக்களிடையேயும் வாழும் இலக்கியங்களாக விளங்கும் தகுதியும் பெருமையும் பெற்று திகழ்கின்றன.

மேலும் பாட்டியலாசிரியர்கள் தனக்கு முன்னர் வாழ்ந்த பாட்டியலாலர்கள் வகுத்துத் தந்த இலக்கிய வகைமைக் கொள்கைகளை அப்படியே முற்றிலுமாக ஏற்கும் இயல்புடையவராக இல்லை என்பதையும் காலச்சூழலுக்கேற்ப கொள்ளத்தக்கனவற்றைக் கொண்டும் தள்ளத்தக்கனவற்றைத் தள்ளியும் இலக்கணம் வகுத்துள்ளனர் என்பதையும் ஒரளவிற்கு யூகிக்க முடிகின்றது.

## தொண்ணூற்றாறு - வரையறு

இலக்கிய வகைகளைத் தொண்ணூற்றாறு என்ற பட்டியலில் அடக்கிக் கூறும் வழக்கு எந்த காலத்தில் எழுந்திருக்கலாம் என்பதை ஒருவாறு கூறலாமேயன்றி இவ்வழக்குத் தோன்றியமைக்குரிய அடிப்படைக் காரணம் எது என்பதைத் தெளிவாக வரையறுத்துக் கூற வழக்கும் உண்டு. சைவத் தத்துவங்களைத் தொண்ணூற்றாறு எனக் கூறும் வழக்கு உண்டு அதுபோல சமய சாத்திரக்கோவையைத் தொண்ணூற்றாறு எனக்கூறும் வழக்கும் உண்டு.

சைவத் தத்துவங்களைப் போல சமய சாத்திரக்கோவைகளைப் போல இலக்கிய வகைகளையும் தொண்ணூற்றாறு எனக்கூறும் வழக்கு எழுந்திருக்கலாம் எனக் கருத முடிகிறது. தொண்ணூற்றாறு என்ற பட்டியலை நிரப்ப பேரிலக்கிய அமைதி கொண்டனவற்றையும் பட்டியலில் சேர்த்தனர். இல்லாதனவற்றையும் இலக்கிய வகைகளாகக் கொண்டனர். அகம் புறம் ஆகிய பொருண்மைகளின் துறைகளை இலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்ற பட்டியலை நிரப்பி இலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்ற பட்டியலை நிரப்பி இலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்ற கருத்தைத் தமிழுலகில் பரப்பினர்.

தொண்ணூற்றாறு என்ற எண் வரையறை எல்லாப் பாட்டியல் நூல்களிலும் ஒருமித்து கூறப்படாமயாலும் தொண்ணூற்றாறு என்னும் பட்டியலில் அடங்கும் இலக்கிய வகைகளுக்கும் கூட சில பாட்டியல் நூல்களில் இலக்கணம் கூறப்படாமையாலும் பட்டியலில் அடங்காத இலக்கிய வகைகளுக்கு பாட்டியல் இலக்கணம் கூறியிருப்பதாலும் இலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்ற எண் வரையறை பொருத்தமில்லாது என அறியலாம்.

## முடிவுரை

இலக்கியங்களுக்கு ஓர் ஒழுங்குதன்மை கொடுக்கவே பாட்டியல்கள் எழுந்தன. ஆனால் பாட்டியல் தரும் செய்திகள் ஆசிரியர்களின் மனபோக்கையே காட்டுகின்றது. விறுப்பு வெறுப்பு தவிர்த்தே இலக்கிய இலக்கணம் பாடப்படுதல் வேண்டும். ஏனென்றால் இவை அனைத்தும் தமிழ் சமூகத்திற்கான நன்கொடை. ஓர் இலக்கணம் வகுக்கும் நெறியை மாறாமல் பின்வரும் ஆசிரியர் சமூகம் அதை ஏற்று மொழிகின்றனரா அல்லது ஏற்கும் வகையில் இலக்கணம் மொழியப்பட்டுள்ளதா அல்லது அறிவுசார் உலகம் இதை எப்படி பார்க்கின்றது என்ற தெளிவினை பெற இதன் மீதான புதுப்புது ஆய்வுகளே தீர்வாக அமையும்.

## References

Aranganathan, S., (2010) Ilakkanna Varalaru- Patiyal Noolkal, Paari Nilaiyam, Chennai, India.

Arangarasan, S. (2014) Ilakkanna Varalaru, Mulai, Nilaiyam, Chennai, India.

Arunachala Pillai, (2005) Agathinaieyal Uraivalam, Saradha Pathippagam, Chennai, India.

Arunachalam, M. (2012) Prabandha Marapiyal, Paari Nilaiyam, Chennai, India.

Arunachalam, M. (2014) Tamil Ilakanna Varalaru, Paari Nilaiyam, Chennai, India.

Jeyaraman, N.V. (2008) Paatiyal Thiranaaivu, Saradha Pathippagam, Chennai, India.

Ragava Iyangar, R, (2016) Panniru Patiyal, Gowra Puthaga Maiyam, Thiruchirappalli, India.

Sanmugam, M. (2013) Sitrilakiyam Valarchi, New Century Book House, Chennai, India.

## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The Authors have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Authors 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

Rajasree, K., Tamilvelu, S. 'Pannirupaattiyal (The Twelve Songs) and the Novel, 'Prabandha Deepikai', Indian Journal of Tamil, 3(4) (2022) 36-42. https://doi.org/10.54392/ijot2245